# யோவான் எழுதின சுவிசேஷம்

## இயேசு என்னும் தேவனுடைய குமாரன்

# இப்புத்தகத்தை ஆக்கியோன் குறித்து

- யோவான் என்னும் பெயரின் அர்த்தம் “தேவன் கிருபையுள்ளவராக இருந்தார்”
- அப்போஸ்தலனாகிய யோவான் செபதேயு, சலோமி தம்பதியரின் குமாரன். யாக்கோபின் இவரது இளையசகோதரர். இவர் கலிலேயாவை சேர்ந்த நல்ல வசதியான குடும்பத்தை சேர்ந்த யூதர் (மாற்கு 15:40-41)
- யோவானும் அவரது சகோதரன் யாக்கோபுவும் அவர்களது தகப்பனாரான செபதேயுவோடு படகில் வலைகளை ஆயத்தம் செய்துகொண்டிருந்தபோது இயேசு அவர்களை அழைத்தார். யோவான், யாக்கோபு ஆகிய இருவரும் படகையும், தகப்பனாரையும் விட்டுவிட்டு இயேசுவிற்கு பின்சென்றார்கள் (மாற் 4:18-22)
- யோவான் இயேசுவினால் அழைக்கப்படும் வரையில் யோவான்ஸ்நானகனின் சீஷனாக இருந்திருக்கிறார் என்று காணப்படுகிறது (யோவா 1:19-61)
- இயேசு அடிக்கடியாக பேதுரு, யாக்கோபு, யோவான் போன்றோரை தனியே அழைத்துச் சென்றதால், அவர்கள் சீஷர்களில் உள்வட்டத்தை சார்ந்தவர்கள் என்று வரையறை செய்யப்பட்டார்கள் (13:23-24,20:2-10,21:2,21:7,21:20 தொடர்ந்த மற்ற பகுதிகள்).
- யோவான் இயேசுவின் உள்வட்டத்தின் சீஷனாக இருந்தது மாத்திரமல்ல, அவர் தம்மை இயேசுவிற்கு அன்பான சீஷன் என்றும் குறிப்பிடுகிறார்(13:23,20:2,21:7,21:20).
- யோவானும் அவரது சகோதரன் யாக்கோபுவும் ‘‘இடிமுழக்க மக்கள்’’ என்று அறியப்பட்டிருந்தார்கள் (மாற்கு 3:17).

# இப்புத்தகத்தை ஆக்கியோன் குறித்து

- இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் யோவான் ஆதித்திருச்சபையின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய கருவியாக தொடர்ந்து செயற்பட்டார். பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரை பவுல் எருசலேம் சபையின் தூண்கள் என்று குறிப்பிடுகிறார் (கலா 2:9)
- தேவாலயத்திற்கு போகும்போது சப்பாணியாக இருந்த மனிதனை குணமாக்கின நிகழ்வில் பேதுருவோடு யோவானும் சென்றார் என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது (அப் 3:1-11).
- இதன்காரணமாக இருவரும் ஆலோசனை சங்கத்திற்கு விசாரணைக்கு அழைக்கப் பட்டார்கள் (அப் 4:1-23).
- சில காலத்திற்கு பின் பேதுருவும், யோவானும் சமாரியாவில் நடந்துகொண்டிருந்த வேலையை உறுதிப்படுத்திக்கொள்ள அங்கு பயணித்தார்கள் (அப் 8:14-24).
- பின்னாட்களில் அவர் பத்மு தீவிற்கு நாடுகடத்தப்பட்டு (வெளி 1:9) அங்கிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்பு எபேசுவிற்கு வந்து தனது மரணம் வரை அங்கேயே இருந்தார்.
- புதிய ஏற்பாட்டில் அதிக எண்ணிக்கையிலான புத்தகங்களை எழுதியவர்களில் பவுலுக்கு பின் இரண்டாவதாக இடம்பெறுபவர் யோவான்.
- யோவான் சுவிஷேசம், 1,2,3 யோவானின் நிருபங்கள், வெளிப்படுத்தின விஷேசம்.
  - அதிகாரங்கள் 21
  - வசனங்கள் 879

# யோவான் எழுதிய சுவிஷேத்தின் தனிச்சிறப்புக்கள்

- மத்தேயு யூத வாகர்களுக்காக எழுதினார்.
- மாற்கு ரோம வாகர்களுக்காக எழுதினார்.
- லூக்கா கிரேக்க வாகர்களுக்காக எழுதினார்.
- யோவான் எல்லோருக்காகவும் எழுதினார்.

- மத்தேயு இயேசுவின் வரலாற்றை யூத இனத்தின் தகப்பனான ஆபிரகாமிலிருந்து ஆரம்பிக்கிறார்.
- லூக்கா இயேசுவின் வரலாற்றை மனித இனத்தின் தகப்பனான ஆதாமிலிருந்து ஆரம்பிக்கிறார்.
- ஆனால் யோவான் வரலாற்றில் இன்னும் வெகுதூரம் பின்னோக்கிப்போய் "ஆதியிலே" என்று ஆரம்பிக்கிறார் (ஆதி 1:1)
- ஆதியிலே இருந்த வார்த்தை என்று ஆரம்பித்து இயேசுவை காண்பித்தின் வாயிலாக யோவான், தேவனுடைய சுபாவத்திற்கும் இயேசுவின் சுபாவத்திற்கும் நேரடியான தொடர்பை ஏற்படுத்துகிறார்.
- மத்தேயு இயேசுவை ராஜாவாக காண்பித்தார். மாற்கு இயேசுவை ஊழியனாக காண்பித்தார். லூக்கா இயேசுவை மனுஷ குமாரனாக காண்பித்தார். யோவான் இந்த மூவரையும்விட இயேசுவின் தெய்வீகத்தை அதிகமாக முன்னிறுத்துகிறார். இயேசுவை தேவனுடைய வார்த்தையாக, தேவனுடைய குமாரனாக, தேவனாக காண்பிக்கிறார்.

# இயேசுவே தேவன்

- யோவானின் எழுத்துக்கள் இயேசு என்ன செய்தார் அல்லது என்ன சொன்னார் என்பதை மாத்திரம் சொல்லாமல் அவர் யார் என்பதை நேரடியாக சொல்லுகிறது.
- இயேசு தேவனுடைய தெய்வீக குமாரன் என்று யோவான் காண்பிப்பது அவர் தனது சுவிஷேசத்தில் இயேசுவிற்கு கொடுத்திருக்கும் விஷேச பெயர்களால் வெளிப்படுகிறது.
- **a. "**அந்த வார்த்தை தேவனாயிருந்தது**"** (1:1)
- **b. "**தேவ ஆட்டுக்குட்டி**" (1:29),**
- **c. "**மேசியா**"** (1:41)
- **d. "**தேவனுடைய குமாரன்**"** (1:34,1:49,10:36)
- **e. "**இஸ்ரவேலின் ராஜா**"** (1:49)
- **f. "**உலகரட்சகர்**"** (4:42)
- **g. "**ஆண்டவரும், தேவனும்**"** (20:28)
- யோவானுடைய வாசகர்கள் "இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையவேண்டும்" என்ற காரணத்திற்காகவே யோவான் இந்த சுவிஷேசத்தை எழுதினார் (20:31)

# “நானே” என்னும் இயேசு

- இந்த புத்தகம் முழுவதிலும் இயேசு சொன்ன ‘‘நானே’’ என்ற அறிக்கைகளை யோவான் பதிவுசெய்கிறார்.
- “நானே ஜீவஅப்பம்” (6:35,41,48,51)
- “நான் (தேவனிடத்திருந்து) வந்திருக்கிறேன்:அவர் என்னை அனுப்பியிருக்கிறார்” **(7:29)**
- “நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்” (8:12,9:5)
- “நான் (தேவனாய்) இருக்கிறேன்” (8:58)
- “நானே வாசல்” (10:7,9)
- “நானே நல்ல மேய்ப்பன்” (10:11,14)
- “நான் தேவனுடைய குமாரன்” (10:36)
- “நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்” (11:25)
- “நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்” (14:6)
- “நான் திராட்சச்செடி” (15:1,5)

# “நானே” என்னும் இயேசு

- இயேசு ஒருவரே இரட்சகர், தேவனை அறிவதற்கான ஒரே வழி அவரே என்பதை யோவான் வலிமையான வாதமாக முன்வைக்கிறார் (1:18,14:6)
- யூதர்களின் கதாநாயகர்களாக கருதப்பட்ட மோசேயிலும், ஆபிரகாமிலும் இயேசு பெரியவர் (1:17,8:58)
- இதிலே 8:57-58ல் இயேசு “ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்” என்று சொன்னது மிகவும் முக்கியமான அறிவிப்பு.
- 10:30-33ல் “நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்” என்று இயேசு சொன்னபோது யூதர்கள் அவர் தன்னை தேவன் என்று சொன்னதினால் தேவதூஷணை செய்தார் என்று சொல்லி அவர்மேல் கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள்.
- இயேசு முழுவதும் தேவனாயிருந்த அதே வேளை முழுவதும் மனிதனாயுமிருந்தார் என்பதை அழுத்தமாய் காண்பிப்பதற்காக இயேசுவுக்கு உண்டான பசி, தாகம், களைப்பு, வேதனை, மரணம் ஆகியவற்றை குறிப்பிடுகிறார்.
- இது அன்றைய காலகட்டத்தில் இருந்த நாஸ்டிக்கஸ் (Gnostics) என்கிற தவறான உபதேசக்காரர்கள் இயேசு மனிதனாக மாத்திரமேயிருந்தார் என்று சொல்லிவந்ததற்கு எதிராக வைக்கப்பட்ட வலிமையான எதிர்வாதமாக இருந்தது.

# அடையாளங்களின் புத்தகம்

- இந்த புத்தகத்தில் உவமைகள் இல்லை. ஏழு அற்புதங்கள் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. (இதில் ஐந்து வேறெங்கும் குறிப்பிடப்படவில்லை)
- இந்த புத்தகம் "அடையாளங்களின் புத்தகம்" என்றும் பிரபலமாக அறியப்பட்டுள்ளது (அதி 2-12)
- 20:30 இயேசு இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்.
- இயேசு தேவனுடைய குமாரன் என்று காண்பிக்க யோவான் காண்பிக்கும் ஏழு அற்புதங்கள்.
- தண்ணீரை இரசமாக மாற்றியது 2:1-11
- ராஜாவின் மனுஷனின் குமாரனை குணமாக்கியது 4:46-54
- திமிர்வாதக்காரனை குணமாக்கியது 5:1-18
- திரளான ஜனங்களை போஷித்தது 6:6-13
- தண்ணீரின் மேல் நடந்தது 6:16-21
- குருடனுக்கு பார்வையளித்தது 9:1-7
- லாசருவை உயிர்ப்பித்தது 11:1-45

- யோவான் சுவிஷேசத்தை எழுதியவர் நடந்த தொடர் சம்பவங்களின் விபரிப்பை மாத்திரம் எழுதாமல் அந்த சம்பவங்களின் இறையியல் முக்கியத்துவம் வெளிப்படும் வகையில் அதை தனித்துவமான ஒழுங்கில் கட்டமைக்கிறார்.

# இயேசுவே “ஒளி”

* யோவான் சுவிஷேசம் நேர்,எதிர் பதங்களை கொண்டு எழுதப்பட்டிருக்கிறதை அவதானிக்கலாம்.

1.ஒளியும் இருளும் 1:4-9

2.அன்பும் பகையும் 15:17-18

3.உயர்விலிருந்து தாழ்விலிருந்து 8:23

4.ஜீவனும் மரணமும் 6:57-58

5.சத்தியமும் பொய்யும் 8:32-47

* 1:4-9ல் யோவான் இயேசுவை மனிதருக்கு ஒளியாக காண்பித்து இருள் ஒளியை புரிந்து கொள்வதில்லை என்பதையும் எடுத்துரைக்கிறார்.
* இந்த ஒளியைக் குறித்து யோவான் ஸ்நானகன் தன் மூலமாய் அவரை விசுவாசிப்பதற்காக சாட்சிகொடுத்தார். 5:35 யோவான் ஸ்நானகன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான் என்று சொல்லுகிறது.
  * 3ம் அதிகாரத்தின் 19வது வசனத்தில் ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷரு டைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறார்கள் என்று இயேசு சொன்னார். (ஒளிக்குள் வந்தால் தங்கள் பொல்லாத கிரியைகள் வெளியரங்கமாகிவிடும் என்கிற அச்சத்தினால் பொல்லாத மனிதர்கள் ஒளியை வெறுக்கிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, சத்தியத்தை கைக்கொள்ளுகிறவர்கள் தங்களது கிரியைகள் தேவனால் நடத்தப்படுகிறது என்று காணும்படியாக ஒளிக்குள் வருகிறார்கள்).
  * இயேசு உலகத்திற்கு ஒளி (8:12,9:5) என்று சொல்லப்படுகையில், பிசாசானவன் உலகத்தின் அதிபதி என்று குறிப்பிடப்படுகிறான் (12:31, 14:30, 16:11).
  * 12:35-36ல் இயேசு ஜனங்களிடத்தில் இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியாதிருக்கிறதாலே ஒளியிலே நடப்பது அவசியம் என்று சொல்லுகிறார்.
  * மேலும் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்றும் ஜனங்களுக்குச் சொன்னார்.
  * இறுதியாக 12:16ல் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, அவர் உலகத்திற்கு ஒளியாக வந்தாக சொன்னார்.

# பிரதான ஆசாரிய ஜெபம்

- 17ம் அதிகாரத்தில் எந்த சுவிஷேசங்களில் இருப்பதை காட்டிலும் அதிக நீளமான இயேசுவின் ஜெபம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த ஜெபத்தை இயேசு தமது சீஷர்களுக்கு இறுதி அறிவுரையை கூறியபின்னும், அவர் காட்டிக்கொடுக்கப்பட்டு, கைதுசெய்யப்பட்டு, சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னும் செய்தார்.
- மோசேயைக்கொண்டு தேவன் சீனாய் மலையில் இஸ்ரவேலருக்கு நியாயப் பிரமாணத்தை கொடுத்தபோது பிரதான ஆசாரியப் பணி ஸ்தாபிக்கப்பட்டது. ஆரோனும் அவனுக்கு பின்பு அவனது சந்ததியாரும் தேவனுக்கு முன்பாக இஸ்ரவேல் ஜனத்திற்காக பரிந்துபேச தெரிவுசெய்யப்பட்டிருந்தார்கள்(யாத் அதி28-29)
- பிரதான ஆசாரியனாக தெரிவுசெய்யப்படுபவர் மகாபரிசுத்த ஸ்தலத்துக்குள் பாவநிவாரணநாளில் பலிசெலுத்த பிரவேசிப்பார். இது ஜனங்களுக்கு தற்காலிக பாவநிவாரணத்தை கொடுத்தது (எபி 9:7).
- இயேசு வந்தபோதோ அவர் இறுதியானதும், பரிபூரணமானதுமான பலியாக தம்மையே ஒப்புக்கொடுத்ததினால் அது ஜனத்திற்கு பாவநிவாரணத்தை அளித்தது மாத்திரமல்ல அவரது ஜனத்தை முற்றிலும் சுத்தீகரித்து, அவர்களை இரட்சித்தார்.
- எபிரேயர் 5:7-10
- அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்.
- சீஷர்களுக்கு முன்பாக பலத்த சத்தமாய் செய்யப்பட்ட மனதையுருக்கும் இந்த பரிந்துபேசும் ஜெபம், இயேசுவுக்கு தேவனோடு இருந்த அன்னியோன்னிய ஐக்கியத்தை இன்னும் அதிகமாக நமக்கு காண்பிக்கிறது.

# பிரதான ஆசாரிய ஜெபம்

- இந்த ஜெபத்தை 3 பகுதிகளாக பிரிக்கலாம்
  - 17:1-5 இயேசு தமக்காக ஜெபித்தார் (பிதாவாகிய தேவனுக்கு தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்து)
  - 17:6-19 தமது எல்லா சீஷர்களுக்காகவும் பரிந்துபேசி ஜெபித்தார்
  - 17:20-26 நூற்றாண்டுகள் கடந்தும் அவரை விசுவாசிக்கபோகும் சகல விசுவாசிகளுக்காகவும்- புதிய உடன்படிக்கை சபையின் ஐக்கியத்திற்காகவும் ஜெபித்தார்.

| 1. தமக்காக ஜெபித்தார் | 2. சீஷர்களுக்காக ஜெபித்தார் | 3 எதிர்கால விசுவாசிகளுக்காக ஜெபித்தார் |
|---|---|---|
| சிலுவையின் மகிமையை உறுதிப்படுத்தும் வண்ணமாக ஜெபித்தார் வச 1-2 | அவர்களது ஞானத்திற்காக வச 6-9 | பிதாவோடும், குமாரனோடும் அவர்களுக்கு இருக்கவேண்டிய ஐக்கியத்திற்காக வச 20-22 |
| நித்தியஜீவனினின் முக்கியத்துவத்தை முன்னிறுத்தி ஜெபித்தார் வச3-4 | அவர்களது விடாமுயற்சிக்காக வச 10-12 | அவர்களுக்குள் ஒருவரோடொருவருக்கு இருக்கவேண்டிய ஐக்கியத்திற்காக வச 23 |
| பிதாவின் மகிமையை பகிர்ந்துகொள்ளும் சந்தோஷத்திற்காக வச5 | அவர்களது சந்தோஷத்திற்காக வச 13 | அவர்கள் அவரோடு என்றும் இருக்கப்போகிற எதிர்காலத்திற்காக வச 24-25 |
| | அவர்கள் தீமையிருந்து பாதுகாக்கப்பட வச 14-16 | அவர்களது பரஸ்பர அன்புக்காக வச 26 |
| | அவர்களது பரிசுத்ததிற்காக வச 14-17 | |

# யோவான் சுவிசேஷத்தின் முக்கிய பகுதிகள்

**I.** தேவனுடைய குமாரன் மனுவுருவாதல் 1:1-18

**II.** தேவனுடைய குமாரனை அறிமுகப்படுத்துதல் 1:19-4:54

A. யோவான் ஸ்நானகனால் 1:19-34

B. யோவான் ஸ்நானகனின் சீஷர்களுக்கு 1:35-51

C. கானாவூர் கலியாணத்தில் 2:1-11

D. எருசலேம் தேவாலயத்தில் 2:12-25

E. நிக்கொதேமுவிற்கு 3:1-21

F. யோவான் ஸ்நானகனால் 3:22-36

G. சமாரியப் பெண்ணிற்கு 4:1-42

H. கப்பர்நகூமில் அரசாங்க அதிகாரிக்கு 4:43-54

**III.** தேவனுடைய குமாரனோடு சர்ச்சை 5:1-12:50

A. எருசலேமில் ஒரு விருந்தில் 5:1-47

1. அற்புத அடையாளம் 5:1-9
2. எதிர்வினை 5:10-18
3. உரை 5:19-47

B. பஸ்கா பண்டிகையின்போது கலிலேயாவில் 6:1-71

1. அற்புத அடையாளம் 6:1-21
2. உரை 6:22-40
3. எதிர்வினை 6:41-71

C. கூடாரப்பண்டிகையின்போது எருசலேமில் 7:1-10:21

1. 1வது விவாதம் - உரை 7:1-29
2. எதிர்வினை 7:30-36
3. 2வது விவாதம் - உரை 7:37-39
4. எதிர்வினை 7:40-53
5. 3வது விவாதம் - உரை 8:1-58
6. எதிர்வினை 8:59
7. 4வது விவாதம் - அற்புத அடையாளம் 9:1-12
8. எதிர்வினை 9:13-41
9. 3வது விவாதம் - நல்ல மேய்ப்பன் குறித்த உரை 10:1-18
10. எதிர்வினை 10:19-21

# யோவான் சுவிஷேத்தின் முக்கிய பகுதிகள்

D. பிரதிஷ்டைப் பண்டிகையின்போது எருசலேமில் 10:22-42

1. உரை 10:22-30
2. ஏற்றுக்கொள்ளப்படாமை 10:31-42

E. பெத்தானியாவில் 11:1-12:11

1. அற்புத அடையாளம் 11:1-44
2. எதிர்வினை11:45-57
3. மரியாளால் அபிஷேகிக்கப்படுதல் 12:1-8
4. எதிர்வினை 12:9-11

F. எருசலேமில் 12:12-50

1. வெற்றிப் பிரவேசம் 12:12-19
2. உபதேசம் 12:20-50

**IV.** தேவனுடைய குமாரனின் அறிவுரைகள் 13:1-16:33

A. மன்னிப்பை குறித்து 13:1-20

B. அவர் காட்டிக்கொடுக்கப்படப்போவதை குறித்து 13:21-30

C. அவரது பிரிவை குறித்து 13:31-38

D. பரலோக ராஜ்யத்தை குறித்து 14:1-14

E. பரிசுத்த ஆவியைக் குறித்து 14:15-26

F. சமாதானத்தைக் குறித்து 14:27-31

G. கனிகொடுத்தலைக் குறித்து 15:1-17

H. உலகத்தைக் குறித்து 15:18-16:6

I. பரிசுத்த ஆவியைக் குறித்து 16:7-15

J. அவரது இரண்டாம் வருகை குறித்து 16:16-33

**V.** தேவனுடைய குமாரனின் பரிந்துபேசுதல் 17:1-26

**VI.** தேவனுடைய குமாரன் சிலுவையில் அறையப்படுதல் 18:1-19:42

A. கைது 18:1-11

B. விசாரணைகள் 18:12-19:15

1. அன்னாவுக்கு முன்பாக 18:12-23
2. காய்பாவுக்கு முன்பாக 18:24-27
3. பிலாத்துவுக்கு முன்பாக 18:28-19:16

C. சிலுவையில் அறையப்படுதல் 19:17-37

D. அடக்கம் 19:38-42

**VII.** தேவனுடைய குமாரனின் உயிர்த்தெழுதல் 20:1-21:25

A. வெறுமையான கல்லறை 20:1-9

B. உயிர்த்தெழுந்த ஆண்டவர் காட்சியளித்தல் 20:11-21:25

1. மகதலேனா மரியாளுக்கு 20:10-18
2. தோமா நீங்கலாக மற்ற சீஷர்களுக்கு 20:19-25
3. தோமா உள்ளிட்ட எல்லா சீஷர்களுக்கும் 20:26-31
4. எழு சீஷர்களுக்கு 21:1-14
5. பேதுருவுக்கும், அன்பான சீஷனுக்கும் 21:15-25